IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 56/2016
P.W.1 - சந்திரசேகரன் த/பெ.ஜெயராமன்
DATE - 16.10.2023.

வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. ஏற்கனவே நான் எங்கு வேலை செய்து வந்தேன் என்றால் இந்திய விமானபடையில் சார்ஜன்டாக பணி புரிந்து ஓய்வு பெற்று சுங்க இலாகா துறையில் கண்காணிப்பாளராக பணி புரிந்து 2013ல் பணி ஓயயவு பெற்றேன். தாட்சாயினி என்பவர் யார் என்றால் முதல் பிரதிவாதியின் நிறுவனத்தில் அவர் ஒரு இயக்குநராக உள்ளார். அவ்வாறு அவர் இயக்குநராக உள்ளார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வா.சா.ஆ.22 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தை நான் எங்கிருந்து பெற்றேன் என்றால் இணையதளம் மூலம் எடுத்தேன். சிவக்கொழுந்து என்பவரை எதற்காக இந்த வழக்கல் சேர்த்தேன் என்றால் அவரும் ஒரு இயக்குநர் என்பதால் வழக்கில் சேர்த்தேன். அவ்வாறு அவர் இயக்குநராக உள்ளார் என்று வா.சாஆ.22 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, ஆனால் வா.சா.ஆ.21 ஆவணத்தில் உள்ளது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் கோரிக்கையின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

P REVATHY Digitally signed by P REVATHY

ADJ(FTC) VELLORE.